**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Tamil Culture in *Mutthollairam*

**Dr. G. Joseph Arun Kumar**, St.Joseph College of Arts and Sciences, Mettur,
ORCiD: https://orcid.org/0000-0003-2924-0633
**DOI: 10.5281/zenodo.6623015**

## Abstract

*Tamils have been living their lives with a cultured spirit. Community is the foundation where culture develops. No living thing can live independently from other living things. Man has inherited the natural tendency to depend on other living beings from birth. Literature is the clearest picture of life. The history and way of life of the people of a country and the ups and downs they have received are portrayed through literature. Tamil Literature is clear evidence of it. The likes and dislikes of the people can be known through culture. Society has a role to play in cultivating culture. It is possible to know the culture of the people through literature. Hence, this article sets out to explore the culture found in 'Mutthollairam'.*

**Keywords:** Tamils, Literature, Culture, *Mutthollairam.*

**References**

[1] Duraisamy Pillai.S. *Purananooru*. Theninthia Saiva Sithantha Noorpathipukalagam, Chennai-600108, 1947.

[2] Puliyur Kesikan. *Kurunthogai*. Sri Shenbaga Pathipagam, Chennai – 600 017, 2010.

[3] Murugiah Pakkirisamy. *Sanga Illakiathil Manitha Neyam.* Vanitha Pathipagam, Chennai – 600017, 2011.

**Author Contribution Statement:** NIL.

**Author Acknowledgement:** NIL.

**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# முத்தொள்ளாயிரம் காட்டும் தமிழர் பண்பாடு

**முனைவர் ஞா.ஜோசப் அருண்குமார்,** புனிதஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டூர்.
ORCiD: https://orcid.org/0000-0003-2924-0633
DOI: 10.5281/zenodo.6623015

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர் தம் வாழ்க்கையில் பண்பட்ட உள்ளத்தோடு வாழ்ந்து வந்துள்ளனர். சமூகம் என்பது பண்பாட்டை வளர்க்கும் களம் ஆகும். எந்த உயிரும் பிற உயிர்களின் சார்பின்றி வாழ்தல் இயலாது. மனிதனும் பிறப்பில் இருந்தே பிற உயிர்களைச் சார்ந்து வாழ்வதை இயல்பான பண்பாகப் பெற்றுள்ளான். வாழ்வின் தெளிவான சித்திரமே இலக்கியம். ஒரு நாட்டு மக்களின் வரலாறு வாழ்க்கை முறை அதில் அவர்கள் பெற்றுள்ள உயர்வு தாழ்வுகள். அவர்களுடைய விருப்பு வெறுப்புகள் போன்றவற்றை பண்பாட்டின் மூலம் அறியலாம். பண்பாட்டை வளர்ப்பதில் சமூகத்தின் பங்கு உள்ளது. இலக்கியங்கள் மூலம் மக்களின் பண்பாட்டை அறிய முடிகிறது. இவ்வியல் முத்தொள்ளாயிரத்தில் காணலாகும் பண்பாட்டினை ஆராய்வதாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** *முத்தொள்ளாயிரம்*, இலக்கியங்கள், தமிழர் பண்பாடு

**முன்னுரை**

மனிதனை வேறுபடுத்துவது பண்பாடு ஆகும். பண்பாடானது காலத்திற்குக் காலம் இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம், நாட்டுக்கு நாடு மாறுபடக்கூடியது. பண்டைத் தமிழர்கள் வகுத்து வைத்த வாழ்க்கை முறைகளை வழிவழியாக வரும் தலைமுறையினர் பின்பற்றி வருகின்றனர். பண்பாடு என்பது அக வளர்ச்சியின் உயர்ந்த எண்ணங்கள், சிறந்த பழக்க வழக்கங்கள் இவை அனைத்தும் பண்பாடாகும். இதனை முன்னோர் நாகரிகம் என்று சொல்லால் வழங்குவர். நாகரிகமும் பண்பாடும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நாணயத்தின் இரு பக்கங்கள் என்பர்.

**முடியுடை வேந்தர்**

அரசர்கள், அரசர்க்குரிய அனைத்துச் செல்வங்களும் பெற்றிருந்தவராய் விளங்கினர். தமிழ்நாடு மிகச்சிறிய பரப்புடையது என்றாலும் சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்களும் ஆட்சி செலுத்தினர் என்று கூறுவர். இதில் மூவேந்தர்களின் ஆட்சி முறையும் மக்களின் நலனைக் கருதியே அமைந்திருந்தது. அதாவது தன் நாட்டு மக்களின் பாதுகாப்பு கருதியே உள்ளது. இதனை

**நளி இரு முந்நீர் ஏணியாக**
**வளிஇடை வழங்கா வானம் சூடிய**
**மண்திணி கிடக்கைத் தண்தமிழ்க் காவலர்**
**அரசு எனப்படுவது நினதே பெரும் (புலியூர்க்கேசிகன் (உ.ஆ). புறநானூறு, ப.35)**

என வெள்ளைக்குடி நாகனார் புறநானூற்றில் கூறுகிறார். வெற்றியுடன் ஆள்பவர் மூவேந்தர். அவர்கள் போல் என்றால் மக்களைப் பாதுகாப்பாக பாதுகாத்த பின்பே போரைத் தொடங்குவர். இதில் மக்களின் பாதுகாப்பே முக்கிய நோக்கமாகும். இதனை,

**பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த்**

**திறை முறையின் உய்யாதார் தேயம் முறை முறையின்**
**ஆன்போய் அரிவையர் ஆடவர்போய் ஆய்ஈன்ற**
**ஈன்பேய் உறையும் இடம் (மு.தொ.பா.எ. 106)**

என்கிறார் ஆசிரியர். மேலும், போரில் மக்கள் அழியாமல் இருப்பதற்குப் பறையைக் கொண்டு எச்சரிக்கை செய்வர். பகைவரைக் கொல்லுகின்ற யானைப் படையை உடைய மன்னன் முறையாகத் திறை செலுத்தாதவர்கள் மீது படை எடுத்துச் செல்வான். போர் புரிவதற்கு முன் பசு, பத்தினிப் பெண்டிர், நோய்வாய்ப்பட்டோர், முதியோர் ஆகியோரை வெளியேறும்படி கூறுவர். பின்னரே போரைத் தொடங்குவர்.

**வேந்தனின் கடமை**

வேந்தன் குடிமக்களின் தந்தையாகக் கருதப்பட்டான். அவனுக்கு அனைத்து உயிர்களையும் காப்பதும் குடிமக்களுக்கு எத்தகைய தீங்கும் ஏற்படாமல் காப்பதும் வேந்தனின் கடமையாகும். இதனை,

**இரியல் மகளிர் இலைஞெமலுள் ஈன்ற**
**வரிஇளம் செங்காய் குழவி - அரையிரவில்**
**ஊமன்பாராட்ட உறங்கின்றே செம்பியன்தன்**
**நாமம் பாராட்டதார் நாடு (மு.தொ.பா.எ.52)**

போரில் வெற்றி பெற்ற சோழன் செம்பியனுடைய பெயரைப் பாராட்டாத பகைவர்கள் புற முதுகிட்டு ஓடினர். அவர்களுடைய நாடுகள் அழிக்கப்பட்டன. அதனால் அந்நாட்டுப் பெண்களின் சிவந்த கால்களை உடைய குழந்தைகள் நள்ளிரவில் கூகைகள் தாலாட்டத் தூங்கினர். அதாவது அரசனானவன் மக்களைக் காத்து வளம் பெறச் செய்தான் மன்னன் மக்களுக்கு உயிர் போன்றவனாக விளங்கினான். இதனை,

**நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான்உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே (புலியூர்க்கேசிகன் (உ.ஆ). புறநானூறு, பா.எ.186)**

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது. உலக மக்களுக்கு எவ்வாறு நெல்லும் நீரும் சிறப்பான ஒன்றாக உள்ளதோ, அதே போல் வேந்தன் மக்களுக்கு உயிர் போன்றவனாக உள்ளான்.

**ஆட்சி முறை**

மன்னர்களின் ஆட்சி முறையானது சிறந்த படைகளைக் கொண்டும், அறவழியிலும் மக்களைப் பாதுகாப்பாக வைத்து இருந்தனர். மன்னனும் மக்களும் மனம் பொருந்தி ஒத்துழைத்தனர். பகைவர்களைத் தன் படை கொண்டு அழித்து மக்களுக்கென மன்னன் ஆட்சி செய்தான். இதனை,

**வாகை வனமாலை சூடி அரசுறையும்**
**ஓகை உயர்மாடத் துள்ளிருந்து கூகை**
**படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றெ தென்னவன்**
**விடுமாற்றங் கொள்ளாதார் நாடு (மு.தொ.பா.எ.105)**

என்கிறது முத்தொள்ளாயிரம். பாண்டிய மன்னனுடைய ஆணையை ஏற்றுக் கொள்ளாத பகைவர்களுடைய நாடுகள் எவ்வாறு காட்சியளிக்கிறது என்றால் உயர்ந்த மாடங்களிலிருந்து கோட்டான்கள் அலறக்கூடிய தன்மையுடையதாக உள்ளது.

**ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**

**வேந்தனும் வேந்து கெடும் (வெ.நாமக்கல் கவிஞர் (உ.ஆ) திருக். எளிய உரை, கு.எ.899)**

உயர்ந்த தவக் கொள்கையை உடையவர்கள் கோபித்துக் கொள்ள நேர்ந்தால் அவனுடைய ஆட்சி முறையும் அவனுடைய வலிமையும் முறிந்து அரசாட்சியை இழந்து விடுவான்.

**அறநெறி ஆட்சி**

பண்டைக் காலத்தில் மன்னராட்சியில் மக்கள் உயரிய வாழ்க்கை வாழ்ந்த போதும், போரும் பூசலுமான சூழல்கள் உருவாவதற்கு இடம் இருந்தது. ஒருவரை ஒருவர் போரில் வெற்றி கொள்வது பெருமையாகக் கருதப்பட்ட காலம். அதனால் வீரத்திற்குப் பெரிய அளவில் மதிப்பும் ஆட்சிச் சிறப்பும் சிறப்பாக இருந்தது. அதனால் வீரத்திற்குப் பெரிய அளவில் மதிப்பும் ஆட்சிச் சிறப்பும் சிறப்பாக இருந்தது. அதனால் போரில் வெற்றி பெற்று மன்னன் தன் ஆட்சியை சிறப்பானதொரு ஆட்சியாக நடத்தி வந்தான். மக்களின் வாழ்வும் சிறப்பாதொரு வாழ்வாக அமைந்தது. நாட்டின் ஆட்சியை வைத்து மக்களின் வாழ்வானது காணப்படும் என்பதனை,

**வேலன்று வென்றி தருவது மன்னவன்**

**கோலதூஉம் கோடா தெனின் (வெ.நாமக்கல் கவிஞர் (உ.ஆ) திருக்குறள் எளிய உரை, கு.எ.546)**

கூறுகிறார் திருவள்ளுவர். பண்டைக் கால அரசர்கள் மூன்று அறங்களைக் கொண்டு ஆட்சி செய்து வந்தனர். அதாவது நீதி வழங்குவதிலும், அருள் வழங்குவதிலும் தாங்கள் போலவு;, கொடைத்தன்மையில் மழை போலவும் காட்சியளித்தனர். இதனை,

**ஞாயிறன்ன வெந்திறல் ஆண்மையும்**

**திங்களன்ன தண்பெருஞ் சாயலும்**

**வானத்து அன்ன வண்மையும் உடைய ஆகி (புலியூர்க்கேசிகன் (உ.ஆ) புறநானூறு, பா.எ.55)**

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர்தர வாரா**

**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன (புலியூர்க்கேசிகன் (உ.ஆ) புறநானூறு, பா.192)**

என்கிறார் கணியன் பூங்குன்றனார். மன்னன் தனது ஆட்சியில் எல்லா மக்களையும் தம் மக்களாகக் கருதுகின்றான். நமக்கு வரக்கூடிய நன்மை தீமைகள் அனைத்தும் பிறரால் வருவதில்லை. நம்மாலே வருகின்றது. நாம் இன்புறுவதும், துன்புறுவதும் பிறரால் நிகழ்வதில்லை என்று எண்ணி சிறப்பாக ஆட்சி செய்து மக்களைக் காத்து வருகின்றான்.

**போர்த்திறம்**

பண்டைத் தமிழரின் வாழ்க்கையில் அடிப்படையாக உள்ளது வீரமும், போரும் ஆகும். ஒவ்வொரு மன்னனும் தன்னுடைய ஆட்சியில் பகைவர்களைப் போர்க்களத்திலே வென்று வாகை சூடி தன் நாட்டு மக்களைக் காத்தனர் என்பதனை,

**மரகதப் பூண் மன்னவர் தோள்வாளை கீழா**

**வயிரக் கடகக்கை வாங்கித் - துயருழந்து**

**புண்ணுற் றழைக்கும் குறுநரித்தே பூழியனைக்**

**கண்ணுற்று வீழ்ந்தார் களம் (மு.தொ.பா.எ.20)**

என்கிறது முத்தொள்ளாயிரம். சேர மன்னனிடம் தோல்வி அடைந்து இறந்தவர்களின் உடல் போர்க்களத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாறு சிதறிக் கிடக்கிறது. பகை அரசர்களின் தோள்களில் அணியப்பெற்று வயிரம் பதித்த கடகம் இருந்தது. அதனை உண்ட நரிதுன்புற்று வருந்தியது. மேலும், தன்னை எதிர்த்த பகைவர்களைப் பூண்டோடு அழித்த திறத்தை, “அம்பொடு வேல்நுழி வழியெல்லாம் தான் நிற்கும் மன்னே” (புலியூர்க்கேசிகன் (உ.ஆ) புறநானூறு, பா.எ.235) என்ற வரியின் மூலம் அறியலாம். அரசன் அம்பும், வேலும் கொண்டே போர்க்களத்தில் பகை மன்னர்களை வெற்றி பெறுகின்றான். மேலும் அவனின் போர்த் திறத்தை,

**எறிகோல் அஞ்சா அரவின் அன்ன**

**சிறுவன் மள்ளரும் உளரே, அதாஅன்று (புலியூர்க்கேசிகன் (உ.ஆ) புறநானூறு, பா.89)**

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. மன்னனை எதிர்த்துப் போரிட யாருமே இல்லை என்பதை அறிய முடிகிறது. அவன் சீறிப் பாயும் பாம்பு போல படை பலத்தை உடையவன். அதனால் அவன் தன் போர்த் திறத்தை பகை மன்னர்களுக்கும் அறியும்படி செய்கிறான்.

**அருள்தன்மை**

பண்டைத் தமிழகத்தில் அரசன் குடிமக்களால் கடவுளுக்கு இணையாக மதிக்கப்பட்டான். எனவே தான் அவனை ‘கோ’ என்றும் ‘இறை’ என்றும் அழைத்தனர். மன்னர்க்கு அழகு என்றால் அவன் நீதி நெறி பிறழாமல் செங்கோல் ஆட்சி செலுத்துவது மன்னனுக்கு அழகாகும். அதனால் மன்னன் மக்களுக்கு தெய்வமாக காட்சியளிக்கின்றான். என்பதனை,

**குலமகட்குத் தெய்வம் கொழுநனே மன்ற**

**புதல்வர்க்குத் தந்தையும் தாயும் அறவோர்க்கு**

**அடிகளே தெய்வம் அனைவோர்க்கும் தெய்வம்**

**இலை முகப் பைம்பூண் இறை (ஆ.சி.கண்ணம்பிரத்தினம் (உ.ஆ) நீதிக்களஞ்சியம், பா.26)**

என்ற வரிகளின் மூலம் அறியலாம். பெண்ணுக்குக் கணவனே தெய்வம் பிள்ளைக்கு அப்பாவும் அம்மாவும் தெய்வம் நீதியாக நடப்பவர்களுக்கு குருவே தெய்வம். மற்ற மக்களுக்கெல்லாம் பசுமையான பொன்னால் ஆன அணிகலன்களை அணிந்த அரசனே தெய்வமாக இருக்கிறான். இதனையே முத்தொள்ளாயிரம்,

**மடங்கா மயில் ஊர்தி மைந்தனை நாளும்**

**கடம்பம்பூக் கொண்டேத்தி அற்றால் தொட்ங்கமரு;**

**நின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேல் மாறன்ன**

**இன்தமிழால் யாம்பாடும் பாட்டு (மு.தொ.பா.எ.90)**

என்று குறிப்பிடுகிறது. போரில் வெற்றி பொருத்திய படையானது ஒளிவீசுகின்ற வேலையுடைய மன்னனை இனிய தமிழால் பாடுகின்ற பாட்டானது மயில் ஊர்தியை உடைய முருகப் பெருமானை கடம்ப மலரைக் கொண்டு அருச்சனை செய்து துதிப்பதைப் போன்றதாகும். மேலும் இதனையே,

**முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**

**இறையென்று வைக்கப்படும் (வெ.நாமக்கல் கவிஞர் (உ.ஆ) திருக்குறள் எளிய உரை, கு.எ.388)**

என்கிறார் திருவள்ளுவர். அரசனைத் தெய்வமாகவும் அவதாரமாகும் போற்றினர். அரசனே, அழித்தல் தொழில் செய்கின்ற சிவபெருமானைப் போலவும், ஒப்பற்ற வலிமையால் பலராமனைப் போலவும்,

காத்தல் தொழில் செய்கின்ற மாயோனைப் போலவும், கருதியதை முடித்தலாலே முருகனைப் போன்றும் ஒப்பானவனாக உள்ளான் என்பதனை,

**வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்**
**புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன**
**உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற**
**நின்னொன்று கூறுவது உடையேன் என்னெனின்**
**நீயே பிறர்நாடு கொள்ளும் காலை அவர் நாட்டு (புலியூர்க்கேசிகன் (உ.ஆ) புறநானூறு, பா. 57)**

என்கிறார் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார். திருமாலின் அருளோடு, மன்னனின் அருள் தன்மையை ஒப்பிட்டுக் கூறுகின்றனர். இதன் மூலம் அரசனை தெய்வமாகவே மதித்துப் போற்றினர் என்பதனை அறிய முடிகிறது.

**வெண்கொற்றக்குடை**

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் அரசன் மிகவும் முக்கியமான பங்கைப் பெறுகிறான். அதே போன்று அவனுடைய வெண்கொற்றக் குடையும் சிறப்பான இடத்தினைப் பெறுகின்றது என்பதனை,

**மந்தரங் காம்பா மணிவிசும் போலையாத்**
**திங்கள் அதற்கோர் திலதமா எங்கணும்**
**முற்றுநீர் வைய முழுதும் நிழற்றுமே**
**கொற்றப் போர்க் கிள்ளி குடை (மு.தொ.பா.எ.45)**

என்கிறார் ஆசிரியர். போரில் வெற்றி பெற்ற மன்னது வெண்கொற்றக்குடை மந்தர மலையைக் குடைக்காம்பாகவும் அழகிய உயர்ந்த வானத்தை ஓலையாகவும், நிலவினை அதற்கு ஒரு நெற்றிப் பொட்டாகவும் கொண்டு காட்சியளிக்கின்றது. கடவுள் சூழப்பெற்ற இந்த நில உலகினை ஆட்சி செய்து அனைத்து மக்களையும் காத்து வெண்கொற்றக்குடையின் நிழலில் பாதுகாக்கிறான். மேலும், அரசனின் வெண்கொற்றக்குடையினை முழுநிலவுக்கும். குளர்ச்சிக்கும் ஒப்பிட்டுக் கூறுகின்றனர். வெண்கொற்றக்குடையானது முழுநிலவின் வடிவில் உயர்ந்த குடையைப் போன்றது. நிலைத்த இந்த உலகினைக் காத்து குளிர்ச்சியைத் தருகிறது. மேலும் மக்களின் துயரினை நீக்கக்கூடிய தன்மையுடையது என்பதனை,

**ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ**
**மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்**
**கண்பொர விளங்கும் நின் விண்பொரு வியன்குடை**
**வெயில் மறைக் கொண்டன்றோ! அன்றே வருந்திய**
**குடிமறைப் பதுவே, கூர்வேல் வளவ**
**வெளிற்றுப் பனந் தணியின் வீற்றுக் கிடப்ப (புலியூர்க்கேசிகன் (உ.ஆ) புறநானூறு, பா.35)**

என்று வெண்கொற்றக் குடையினைப் புகழ்ந்து பாடியுள்ளார் வெள்ளைக்குடி நாகனார். வானில் உள்ள சூரியனை கருமையான மேகங்கள் நடுவே நின்று வெயிலை மறைத்தது போலவே வெண்கொற்றக் குடையானது சூரியனை மறைத்தது. அதாவது வெண்கொற்றக்குடையானது தீமை, வறுமை ஆகியவற்றை அழித்தது. அரசன் தன் மக்களுக்கு நன்மையையும், செழிப்பையும் கொடுத்து வெண்கொற்றக்குடையின் கீழ் காத்து வருகின்றான்.

**வாழ்வியல் ஒழுகலாறு**

ஒரு வீரனை உருவாக்குவதில் பெற்றோரும் மற்றோரும் துணை நிற்பார்கள். மன்னனின் வீரம் பெரிதாய்ச் சுட்டப்படுகிறது. இருந்தாலும் மன்னன் ஒழுக்கம் நிறைந்தவனாகக் காணப்பெற வேண்டும். என்பதை,

**களியானைத் தென்னன் இளங்கோ என்று எள்ளிப்**
**பணியாரே தம்பார் இழக்க அணியாகம்**
**கை தொழு தேனும் இழக்கோ நறுமாவின்**
**கொய்தளிர் அன்ன நிறம் (மு.தொ.பா.எ. 56)**

என்கிறது முத்தொள்ளாயிரம். யானைப் படையைக் கொண்ட மன்னன் மிகுந்த கரத்தால் பகை மன்னர்கள் தனக்கு அடி பணியவில்லை என்றால் அவர்களைப் போரிட்டு வென்று அவர்களின் நாடுகளைத் தங்களின் நாடுகளாக மாற்றிக் கொள்வார். ஆனால் மன்னன் அணிகலன்கள் அணிந்த பெண்ணை மட்டும் கைகளால்கூட தொட மாட்டான் இவ்வாறு மன்னன் ஒழுக்கம் நிறைந்தவனாகக் காணப்படுகிறான். இதனை,

**இருங்களி றொன்று மடப்பிடி சாரல்**
**இலங்கருவி நீராற் றெளிக்கும் நலங்கிளர்வேல்**
**துன்னரும் போர்க்கோதை தொடாஅன் செருக்கின்**
**மன்னர் மதிலாய வென்று (மு.தொ.பா.எ.109)**

என்று முத்தொள்ளாயிரம் கூறுகிறது. அதாவது போரில் மன்னன் பகை மன்னர்களை வென்றாலும் அவன் பகை மன்னரின் மகளிர் கூட்டத்தைத் தொடமாட்டான். இதில் அரசனாக இருந்தாலும் அவனுக்கு ஒழுக்கமானது சிறப்பாக இருக்க வேண்டும் என்பதனை,

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலவே (புலியூர்க்கேசிகன் (உ.ஆ). புறநானூறு, பா.187)**

என்ற வரிகளின் மூலம் அறியலாம். நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும் எந்த இடத்தில் ஆடவர்கள் நல்லவர்களாக உள்ளார்களோ, அவ்விடத்தில் வாழ்வும் உயர்ந்ததாக இருக்கும்.

**வீரமும் அறிவும்**

பண்டைத் தமிழ் மன்னர்கள் நல்ல உடல் வலிமை வாய்ந்தவர்களாய் இருந்தனர். இளமையில் இருந்தே படைகலப் பயிற்சி பெற்றமையாலும் போர்க்களங்களும் செல்லும் பழக்கம் உடைமையாலும் அவர்களின் உடல் வலிமை பெற்றிருந்தது. நல்ல உடல் வலிமை பெற்றதால் உள்ளமும் செம்மையானதாய் இருக்கும். சிறந்த முறையில் செயலாற்றுவர் என்பதனை,

**கச்சி ஒருகால் மதியா ஒருகாலால்**
**தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப் பிற்றையும்**
**ஈழம் ஒருகால் மிதியா வருமேநம்**
**கோழியர்கோக் கிள்ளி களிறு (மு.தொ.பா.எ.49)**

என்ற வரிகளின் மூலம் அறியலாம். சோழர் பரம்பரையைச் சார்ந்த கிள்ளியினுடைய ஆண் யானையானது காஞ்சி நகரை ஒரு காலால் மிதிக்கும். ஒரு காலால் பாயும் திரைக் கொண்ட குளிர்ந்த வடநாட்டில் உள்ள ஊர் நகரத்தை அழிக்கும் ஈழ நாட்டை ஒரு கால் கொண்டு மிதித்து விட்டு

வெற்றியுடன் வரும் என்பதன் மூலம் மன்னனுடைய வீரத்தையும் அறிவுக் கூர்மையையும் அறியலாம். மேலும்,

**அறிவும், ஈரமும் பெருங்கண்ணோட்டம்**
**சோறுபடுக்கும் தீயோடு**
**பிறர்மண் உண்ணும் செம்மல் நின்நாட்டு**
**மன்னுயிர் எல்லாம் நின் அஞ்சும்மே (புலியூர்க்கேசிகன் (உ.ஆ). புறநானூறு, பா.20)**

என்ற வரிகள் மூலம் அறியலாம். சேரனுடைய அறிவும், அன்பும் அளவிட்டுக் கூற முடியாததன. அறம் நிரம்பிய செங்கோன்மையை உடையவன். உலக உயிர்கள் அனைத்தும் போரில் உனக்குத் துன்பம் நேருமோ என அச்சம் கொள்கின்றன. இவ்வாறு அறிவிலும் வீரத்திலும் சிறப்பாக விளங்குகிறான்.

**முடிவுரை**

தமிழர் பண்பாட்டில் வாழ்க்கையை அகம், புறம் என்றே பிரித்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் காதலையும் வீரத்தையுமே பெரிதும் போற்றி வந்தனர். அது மட்டுமின்றி வீரம் மிக்க ஆண் மகனை மணந்தனர். ஒரு நாடு எவ்வாறு திகழ வேண்டும் நாட்டு மக்களின் கடமை என்ன? அவர்களுடைய வாழ்க்கை முறையானது எப்படிப்பட்டதாக உள்ளது. தமிழர்களின் பண்பாடு எத்தகையது என்பதனை இவ்வியல் மூலம் அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] துரைசாமிப் பிள்ளை. சு. *புறநானூறு*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-600108, முதற்பதிப்பு-1947.

[2] புலியூர்க் கேசிகன். *குறுந்தொகை*. ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை – 600017, முதற்பதிப்பு-2010.

[3] முருகையன் பக்கிரி சாமி. *சங்க இலக்கியங்களில் மனிதநேயம்*. வனிதா பதிப்பகம், சென்னை-17, முதற்பதிப்பு – 2011.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது